This question paper contains 4 printed pages]

*Your Roll No.*...............

250

**B.A. (PROGRAMME)/I** **J**

**TAMIL LANGUAGE (B)—Paper I**

*Time : 3 Hours* *Maximum Marks* : 75

*(Write your Roll No. on the top immediately on receipt of this question paper.)*

I ஏதேனும் ஒரு பொருளில் 150 சொற்களுக்கு மிகாமல் ஒரு சிறு கட்டுரை எழுதுக. 15

அ. சுற்றுச் சூழல் பாதுகாப்பு

ஆ. மழை நீரைச் சேமிப்போம்

இ. பெண் சிசுக் கொலை

II கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதன் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க. 15

மகாத்மா காந்தி அடிகள் தீண்டாமையை விலக்கப் பெரிதும் பாடுபட்டார். அவருடைய வாழ்வின் பெரும் பகுதியைத் தீண்டாமை ஒழிப்பதற்காகவே அர்ப்பணித்தார். சிறுவயதிலேயே அவருக்குத் தீண்டாமை மீது வெறுப்பு ஏற்பட்டது. காந்தியின் வீட்டிற்கு வரும் சுகாதாரத் தொழிலாளி உதாமைத் தொடக்

P.T.O.

கூடாது என்றும்; தொட்டால் தீட்டு என்றும் அவருடையதாயே கூறியும்; அவர் அத்தொழிலாளியைத் தொட்டே பேசினார். பிற்காலத்தில் காந்தியடிகளின் தென்னாப்பிரிக்க வாழ்க்கையில் அவர் பெற்ற அனுபவங்களும் அவரைத் தீண்டாமையை எதிர்த்துப் போராட வைத்தன. தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியத் தொழிலாளர்களை வெள்ளையர்கள் 'கூலிகள்' என்றும்; 'சாமிகள்' என்றும் அழைத்துக் கேவலமாக நடத்தினர். இதுவும் காந்தியடிகள் தீண்டாமையை எதிர்த்துப் போராட வித்திட்டது.

அ. காந்தியடிகள் தமது வாழ்வின் பெரும்பகுதியை எதற்காகச் செலவிட்டார்?

ஆ. காந்தியடிகளுக்குத் தீண்டாமைமீது வெறுப்பு ஏற்படக் காரணம் யாது?

இ. தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் பெற்ற அனுபவங்கள் யாவை?

III பிழை திருத்தி எழுதுக. 10

அ. கீரிக்குட்டி கத்துகின்றது.

ஆ. ராமன் நேத்து சென்னையிலிருந்து வருகிறான்.

இ. இவாமனும் முருகனும் நள்ள நன்பர்கள்.

ஈ. எங்கள் வீட்டிற்கு அருகாமையில் பள்ளிக்குடம் உள்ளது.

IV ஒரு சொல் பல பொருளைத் தரும் விதத்தினை விளக்குக. 5

(அல்லது)

கீழ்க்காணும் சொற்களுக்கு இணையான சொற்களை எழுதுக.

அ. தாள் இ. ஒளி

ஆ. ஆசை ஈ. பொன்

உ விளி

V எவையேனும் **இரண்டுக்கு** விடையளிக்க. 30

அ. 'மாயக் கிளிகள்' என்னும் சிறுகதையை மதிப்பிடுக.

ஆ. 'வேட்கை' என்னும் சிறுகதையின் தலைப்புப் பொருத்தத்தை மதிப்பிடுக.

இ. சாதி ஏற்றத் தாழ்வுகள் சித்திரிக்கப் பட்டுள்ள பாங்கினை 'பள்ளத்தெடு' என்னும் சிறுகதையின் வழித் துலக்குக.

ஈ. 'வீடு' என்னும் சிறுகதையை மதிப்பிடுக.